முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 988

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.06.2022, திங்கட்கிழமை

1. அருள்வடிவாக நின்று உலகை
ஆற்றல்பட காத்தருளும் ஆறுமுகன் என்
மறு அவதாரமாக கலியுகத்தில்
மாதவசியாக வந்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 30 ம் நாள், 13.06.2022 திங்கட்கிழமை)
வரமென உன்பால் தீட்சைபெற்றவரே
வையகத்தில் சித்தி முத்தி காணக்கூடும்
3. கூடுமப்பா ஆறுமுகன் என் வழிபாட்டை
குறையின்றி உன் வழி செய்யும் மக்களே
மாறுதலும் உலகை மாற்றும் மகா சக்தியும்
மாதவபலமும் அடைந்து சிறக்க நேரும்
4. நேர்மைகொண்டு உன் வழி தொடர்ந்து வந்து
நிலவுலகில் தர்மசேவையாற்றிவர
பெருமைமிக்க சுத்த சன்மார்க்க நெறியை
பிசகின்றி உலகோர் பின்பற்றி வர
5. வருகவே நிலமைகள் மாறும்
வருமுலகில் ஞான பலம் கூடும்
தர்மசிந்தை எங்கும் பரவி
தரணியே தனித்துவம் காணும்
6. காணவே அற்புதத்தை அரங்கனைக்கொண்டே
கலியில் கந்தவேலன் நடத்திவர
ஞானமாக ஏற்றால் போதுமப்பா
ஞானிகளாவீர் நீங்களெல்லாம் என்று கூறி
7. கூறியே அரங்கன் ஞானத்தை
குறையின்றி உலகோர் பின்பற்ற
அறிவுதெளிவு அனைத்தும் கூடி
அகிலத்தில் அனைவரும் ஞானிகளாவர்
8. ஆவதற்கு சுபகிருது இந்த விடை திங்களில்
அற்புதத்திற்கு உண்டான காலம் மிகுதியாக இருக்க
தடையற இவை திங்கள் முடிவுக்குள்
தரணியோர் அரங்கனை வந்து வணங்கி தீட்சை ஏற்றுவிட
9. பெருமைபட எல்லா வளமும்
பிசகில்லாத சூட்சும பலமும்
வருமுலகில் அடைந்து சிறப்பர்
வணங்கிவர உலகையே மாற்றி திளைப்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–